

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் தயாரிக்கப்பட்ட "அன்றும் ! இன்றும்! என்றும்! சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க." என்ற புத்தகத்தினை வெளியிட்டார். உடன் கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மைதீன்கான், செயலாளர் சுபேர்கான் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு கம்ம நாயுடு மகாஜன சங்கத்தின் மாநிலத் தலைவர் ரவீந்திரன் கெங்குசாமி நாயுடு, மாநில செயல் தலைவர் வி.மோகன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கோவை – அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி. நாயுடு அவர்களின் பெயர் சூட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நாகர்கோவிலுள்ள கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி அமைப்பின் இயக்குநர் பேராயர் அ.டன்ஸ்டன், குளச்சல் பங்குத் தந்தை ஜெகன், உள்நாட்டு மீனவ இயக்குநர் பேராயர் துரைசாமி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து பேசினார்கள். உடன் கழகத்தின் பொதுச் செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட வன அலுவலர் ராஜேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கம் நன்றி!

### மாநில செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, நவ. 6 –

கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர் சூட்டியதை யடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநிலச் செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.11. 2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநில நிர்வாகிகள், மாநில செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நேரில் சந்தித்து, கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர் சூட்டியதற்கு நன்றி தெரிவித்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறையில் "சிவசங்கர் அறக்கட்டளை சார்பில் குன்னம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், செந்துறை, நல்லாம்பாளையம், உஞ்சினி, சிறுகடம்பூர், ஆனந்தவாடி, இரும்புலிகுறிச்சி, பரணம், பொன்பரப்பி, பெரியாகுறிச்சி, குறிச்சிகுளம், முள்ளுக்குறிச்சி, தளவாய்,சன்னாசிநல்லூர், அங்கனூர் உள்ளிட்ட அரசு மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியில், 10ம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உதவும் "தேர்வை வெல்வோம் வழிகாட்டி வினா – விடை தொகுப்பு, மற்றும் குடிநீர் பாட்டில்களை அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், பொன்.செல்வம், கே.சி. லூயிகதிரவன் மற்றும் மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## சென்னை – கலைவாணர் அரங்கில் நவ.8 அன்று

# பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம்!

### அமைச்சர்கள் தொடங்கி வைக்கிறார்கள்!

சென்னை, நவ.6-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி சென்னை கலைவாணர் அரங்கில் பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது. அமைச்சர் பெருமக்கள் 8.11.2025 அன்று தொடங்கி வைக்கிறார்கள்.

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து அச்சு ஊடகம், காட்சி ஊடகம், செய்தி முகமை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் தொடங்கி வைக்கிறார்கள்.

இம்மாபெரும் சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாம் 8.11.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் காலை 09.15 மணி முதல் மாலை 04.30 மணி வரை நடைபெறுகிறது. இம்முகாமில் இரத்த அழுத்தம், சிறுநீரகம், எக்கோ, இ.சி.ஜி., முழு இரத்தப் பரிசோதனை, காசநோய் கண்டறிதல் உள்ளிட்ட மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம், இருதய மருத்துவம் உள்ளிட்ட மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையும், சென்னை பத்திரிகையாளர் மன்றமும் இணைந்து நடத்தும் இச்சிறப்பு மருத்துவ முகாமினைப் பத்திரிகையாளர்கள் அனைவரும் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


